**வாக்குமூலம்**

**நீதிமன்றம் – கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்**

**அமர்வு வழக்கு எண்: 119/2022** நாள்: 17.10.2025

**அரசு தரப்பு சாட்சி எண் : 23 (திரு. குருவெங்கட்ராஜ் )**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) இந்த வழக்கில் அ.சா.1 புகார் கொடுக்கும் சமயத்தில் ஜெயமங்கலம் காவல் நிலையத்தில் இருந்தேனா என்றால் இல்லை. தேவதானப்பட்டி காவல் நிலையத்தில் இருந்தேன். ஜெயமங்கலம் காவல் நிலையத்திற்கும் தேவதானப்பட்டி காவல் நிலையத்திற்கும் இடையே சுமார் 12 கீ.மீ துூரம் இருக்கும். நான் புகாரை தேவதானப்பட்டி காவல் நிலையத்தில் இருந்து கிளம்பி வந்து ஜெயமங்கலம் காவல் நிலையத்திற்கு வந்து முதல் தகவல் அறிக்கையை நான் பெற்றுக்கொண்டேன். அ,சா.1 திரு.ராஜவேல் அவர்கள் கொடுத்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையை நான் ஜெயமங்கலம் காவல் நிலையத்திற்கு வந்தவுடன் படித்து பார்த்தேன். அவ்வாறு படித்து பார்க்கும் போது முதல் தகவல் அறிக்கையில் திரு. ராஜவேல் என்பவருக்கு 21.01.2021 ஆம் தேதி மதியம் 1.30 மணிக்கு அவருக்கு ஒரு தகவல் கிடைத்ததாகவும் அந்த தகவலின் படி மதியம் 2 மணிக்கு சம்பவம் இடம் சென்று எரிந்து போன பிரேதத்தை பார்த்ததாகவும் சொல்லப்பட்டிருந்தது. அவ்வாறான தகவலை கிராம நிர்வாக அலுவலருக்கு யார் சொன்னது என்று எனக்கு தெரியாது. கிராம நிர்வாக அலுவலரிடம் உங்களுக்கு யார் தகவல் சொன்னது என்று கேட்டேன். ஆனால் அதற்கு அவர் யார் தகவல் சொன்னது என்று சொல்லவில்லை.

2) அவ்வாறு கிடைத்த தகவல் போன் மூலம் கிடைத்ததா அல்லது நேரடியாக யாரும் ஆஜராகி தகவல் கொடுக்கப்பட்டதா என்று கிராம நிர்வாக அலுவலர் என்னிடம் சொல்லவில்லை. இந்த வழக்கில் சம்பவ இடம் குறித்து 2 முறை பார்வை மகசரும், 2

முறை மாதிரி வரைபடமும் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். 2 பார்வை மகசர்களும் மாதிரி வரைபடங்களும் ஒரே சம்பவ இடத்திற்கு தான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். 21.01.2021 ஆம் தேதியே நான் சம்பவ இடத்திற்கு மாலை 5 மணிக்கு சென்றேன். சம்பவ இடத்தை சுற்றி பார்த்தேன். அவ்வாறு சுற்றி பார்க்கும் போது அந்த பகுதியில் இருந்து பைக் ஏதேனும் கைப்பற்றப்பட்டதா என்றால் இல்லை. 27.01.2021 ஆம் தேதி சம்பவ இடத்தின் பகுதியில் இருந்து தான் இவ்வழக்கில் இறந்து போன ஆனந்தராஜ் என்பவருடைய பைக் கைப்பற்றப்பட்டது என்றால் சரிதான். இறந்த நபரின் பெயர் ஆனந்த ராஜ் என்பது எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்யும் போது தான் தெரிய வந்தது. இறந்து போனவரின் பெயர் பிரேத விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஆனந்தராஜ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இறந்து போனவருடைய பெற்றோர்களை சவக்கிடங்கில் வைத்து பிரேத விசாரணை செய்த போது விசாரித்தேன். அவ்வாறு விசாரணை செய்த போது அவர்களின் மகன் காணாமல் போனதாக பிரேத விசாரணை அறிக்கையில் ஏதேனும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

3) இறந்து போன ஆனந்தராஜ் மீன் பண்ணை தொழில் செய்து வந்தார் என்றால் சரிதான். பிரேத விசாரணை அறிக்கையில் காலம் 4 ல் இறந்து போன நபரை எந்த இடத்தில் வைத்து அவரது தகப்பனார் இறுதியாக உயிருடன் பார்த்தார் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆனால் அந்த காலம் 4 ல் எங்கே கடைசியாக பார்க்கப்பட்டது என்று சொல்லப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அந்த இடத்தை பற்றி பிரேத விசாரணை அறிக்கையில் காலம் 4 ல் சொல்லப்படவில்லை. இறந்து போன ஆனந்தராஜ் என்பவரின் மீன் பண்ணை எங்கே உள்ளது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் அந்த மீன் பண்ணைக்கு சென்றேன். அந்த மீன் பண்ணைக்கு சென்ற போது இரவு நேரம் என்பதால் வேலையாட்கள் அங்கு இல்லை. அதன் பிறகு என்றாவது பண்ணைக்கு சென்று வேலையாட்களை விசாரித்தேனா என்றால் இல்லை. வீருவீடுக்கும் சம்பவ இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 20 முதல் 30 கீ.மீ தூரம் இருக்கும்.

4) வீருவீட்டில் இருந்து சம்பவ இடம் வரையுள்ள ரோடுகளில் அல்லது வீடுகளில் இருக்கும் CCTV பதிவுகளை பார்த்தேனா என்றால் சம்பவ இடத்தின் பகுதியில் உள்ள ஒரு ஒயின் ஷாப்பில் பக்கத்தில் இருந்த CCTV கேமராவை பார்த்தேன். ஆனால் அது வேலை செய்யாமல் பழுதடைந்து இருந்தது. மேற்கூறிய CCTV கேமரா பழுதடைந்து இருந்தது என்று காவல் நிலைய நாட் குறிப்பேட்டில் குறிப்பிட்டு இருந்தேனா என்றால் இல்லை. பிரேத விசாரணையை சம்பவ இடத்தில் வைத்து செய்யவில்லை. மருத்துவமனையில் வைத்து செய்யப்பட்டுள்ளது. குற்ற விசாரணை நடைமுறை சட்டப்படி சம்பவ இடத்தில்வைத்து பிரேத விசாரணை செசய்ய வேண்டும் என்றும் அவ்வாற செய்யாவிட்டால் அதற்குரிய காரணத்தை தெரிவிக்க வேண்டும் என்றால் சரிதான். இவ்வழக்கில் அவ்வாறு செய்யாதது ஏன் என்றால் இரவு நேரம் என்பதாலும், கூட்டம் அதிகமாக கூடியதாலும், பிரச்சனை வரும் என்பதாலும் மருத்துவமனையில் வைத்து பிரேத விசாரணை மேற்கொண்டேன். மேற் சொன்ன விவரங்களை நாள் குறிப்பேட்டில் குறிப்பிட்டு உள்ளேனா என்றால் சம்பவ இடத்தில் மக்கள் அதிகமாக கூடியிருந்தாலும், பிரேதம் எரிந்து கருகி இருந்ததாலும் அந்த இடத்தில் வைத்து பிரேத விசாரணை செய்ய இயலாததாலும், கொலை செய்யப்பட்ட பிரேதத்தை அடையாளம் காண வேண்டி மருத்துவமனையில் வைத்து பிரேத விசாரணை செய்யப்பட்டது. சம்பவ இடத்திற்கு 21.01.2021 ஆம் தேதி மாலை 5 மணிக்கு சென்றேன்.

5) அன்றைய தினம் சம்பவ இடத்தில் சுமார் 2 மணி நேரம் இருந்தேன். அதன் பின்பு மீண்டும் சம்பவ இடத்திற்கு எப்போது வந்தேன் என்றால் 27.01.2021 ஆம் தேதி வந்தேன். இதற்கு இடையில் இறந்து போனவருடைய பெற்றோர்கள் சம்பவ இடத்திற்கு சென்றார்களா என்ற விவரம் எனக்கு தெரியவில்லை. 21.01.2021 ஆம் தேதி நான் சம்பவ இடம் சென்ற போது மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. அந்த கூட்டத்தில் இருந்த மக்கள் யாராவது அந்த பகுதியில் ஒரு பைக் இருக்கிறது என்று யாராவது தகவல் சொன்னார்களா என்றால் இல்லை. நான் எந்த தேதியில் மாவட்ட குற்ற பதிவேட்டிற்கு சென்றேன் என்றால் 21.01.2021 ஆம் தேதி நள்ளிரவு அல்லது 22.01.2021 ஆம் தேதி

அதிகாலை பொழுதில் சென்று இருப்பேன். மாவட்ட குற்ற பதிவேட்டு அறையில் இருந்த ஒரு பொருப்பாளர் முன்னிலையில் அங்கு பராமரிக்கப்படும் கணிணியை பார்த்து எத்தனை பேர் காணாமல் போய் உள்ளார்கள் என்ற விவரத்தை சேகரித்தேன். 22.01.2021 ஆம் தேதி காலை சுமார் 5 மணியளவில் இறந்து போனவருடைய தகப்பனார் பால்ராஜ் என்பவருக்கு ஒரு பிரேதம் சம்பவ இடத்தில் கிடப்பதாக சொன்னேன். அவ்வாறு தகவல் தெரிந்து நிலையத்திற்கு வந்த ஆனந்தராஜின் பெற்றோர் மற்றும் உறவினர்களை நான் அழைத்து கொண்டு 8 மணியளவில் சவக்கிடங்கிற்கு சென்று பிரேதத்தை அடையாளம் காட்டினேன்.

6) அ.சா.2 பால்ராஜ் எனது விசாரணையில் அவர் தங்கை கருப்பாயி வீட்டிற்கு சென்று தனது மகனை பற்றி விசாரித்தாகவும் அப்போது முதல் எதிரி இல்லை என்றும் வேலைக்கு சென்றுவிட்டதாகவும் சொல்லவில்லை. அ.சா.3 சிவராஜா என்பவரை நான் தான் விசாரித்தேன். அ.சா.3 சிவராஜா எனது விசாரணையில் அவர் அத்தை கருப்பாயி வீட்டிற்கு சென்று ஆனந்தராஜை பற்றி விசாரித்தாகவும் விஜயசாந்தி அங்கு இல்லை என்று கருப்பாயி சொன்னதாகவும் சொல்லியுள்ளரா என்றால் இல்லை. உறவினர் மூலம் கேட்டு கொண்டதாக சொல்லியுள்ளார். ரமேஷ் என்பவரை நான் தான் விசாரித்தேன். அ.சா.11 திரு. ரமேஷ் என்பவர் என்னுடைய புல விசாரணையில் டீசல் வாங்கி சென்ற நபரின் உடைய அங்க அடையாளங்களை சொல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் தான் அவரிடம் ஒரு போட்டோவை காண்பித்து விசாரித்தோம். அந்த போட்டோவில் ரமேஷ் என்பவர் இவர் தான் டீசல் வாங்கி சென்றார் என்று குறிப்பிட்டு கையொப்பம் செய்தாரா என்றால் கையெழுத்து வாங்கவில்லை. அ.சா.22 ஐய்யனார் என்பவர் எனது புலன் விசாரணையில் 18.01.2021 ஆம் தேதி இரவு அவருடைய இரு சக்கர வாகனத்தில் சென்ற போது 2 நபர்கள் சென்றதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். அந்த 2 நபர்கள் 1, 2 எதிரிகள் தான் என்று காண்பிப்பதற்கு அடையாள அணிவகுப்பு எதுவும் நடத்தப்பட்டதா என்றால் எனது புலன் விசாரணையில் நடத்தப்படவில்லை. அ.சா.11 ரமேஷ் என்ற சாட்சியிடம் டீசல் வாங்கி சென்ற நபர்யார் என்று அடையாளம் காண்பிப்பதற்கு அடையாள அணிவகுப்பு எதுவும் நடத்தப்பட்டதா என்றால் எனது புலன் விசாரணையில் நடத்தப்படவில்லை.

7) காட்ரோடில் அமைந்துள்ள போலீஸ் அவுட் போஸ்டில் இருந்த CCTV footage ல் பதிவாகி உள்ள காட்சியில் ஒரு நபர் இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டு இருப்பதாக காணப்படுகிறது. அந்த நபரின் பின் பக்கம் தான் தெரிகிறது என்றால் ஞாபகம் இல்லை. அந்த பைக்கில் சென்ற நபரின் உடைய உருவத்தை அறுதி இட்டு அடையாளம் காண்பிப்பதற்கு Anthropology அறிக்கை எதுவும் பெற்றேனா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் தலையும் உடலும் தனித்தனியாக இருந்ததா என்றால் இல்லை. இடுப்பிற்கு மேல் தலையும் உடம்பும் இருந்தது. இடுப்பிற்கு கீழ் இரண்டு கால்களில் ஒரு கால் மட்டும் தனியாக இருந்தது. மற்றொரு கால் சதையுடன் சேர்ந்து இருந்தது. TN 57 V 0619 என்ற Hero honda Splender இரு சக்கர வாகனத்தின் பதிவு சான்றிதழ் கைப்பற்றப்படவில்லை, அந்த RC புக்கை பார்த்தால் தான் அந்த வாகனம் யாருக்கு சொந்தமானது என்று தெரிய வரும் என்பதால் மோட்டார் வாகன ஆய்வாளரை விசாரித்தேனா என்றால் எனது புலன் விசாரணையின் போது விசாரிக்கவில்லை. அ.சா.11 பணி செய்த பெட்ரோல் பங்கில் CCTV இருந்தது.அ.சா.11 ரமேஷ் என்பவர் அந்த CCTV இயங்கவில்லை என்று கூறியதால் நான் அந்த CCTV ஐ கைப்பற்றவில்லை. அந்த CCTV ஐ கைப்பற்றி நிபுணருக்கு அனுப்பி அதை சோதனை செய்ய சொல்லவில்லை. இந்த வழக்கில் புகாரானது சொன்ன தேதியில் சொன்ன முறையில் கிராம நிர்வாக அலுவலரால் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

8) என்னுடைய ஆவணங்களின் படி VAO க்கு தகவல் சொன்ன நபர் தான் முதன் முதலாக சம்பவ இடத்தைபார்த்து பிரேதத்தை கண்டு பிடித்தவர் என்று சொன்னால் சரிதான். அந்த நபரை என்னுடைய புலன் விசாரணையில் கண்டு பிடிக்காமல் விட்டது இவ்வழக்கில் பெரும் குறையை ஏற்படுத்தியுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன தேதிகளில் 2 பார்வை மகசர்கள் மற்றும் 2 மாதிரி வரைபடங்கள் தயாரித்தாக சொன்னது உண்மை இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் மாவட்ட குற்ற பதிவேட்டிற்கு சென்று புகைப்படங்களைசேகரித்தாக சொல்வது உண்மை அல்ல என்று சொன்னால்சரியல்ல.

மாவட்ட குற்ற பதிவேட்டு அலுவலகத்தில் புகைப்படங்களை எனக்கு காட்டிய அலுவலர் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் கைப்பற்றியதாக சொல்லப்படும் செருப்பு இறந்த நபர்களின் செருப்பு அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்னது போல் இறந்து போனவரின் பெற்றோர் இறந்த நபரின் உடலை அடையாளம் காண்பித்ததாக சொல்வது உண்மைக்கு புறம்பானது என்று சொன்னால் சரியல்ல.

9) பிரேத பரிசோதனை அறிக்கையில் இறந்த நபரைஅடையாளம் காண்பித்தது காவலர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சமயத்தில் இறந்து போன 4, 5 உடல்கள் இருக்கும் பட்சத்தில் இந்த குற்ற வழக்கிற்குரிய பிரேதம் இது தான் என அடையாளத்தை காவலர் மருத்துவருக்கு காண்பிப்பதற்காக காவலர் அடையாளம் காண்பித்தாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதா சாட்சி தானாக கூறிகிறார். சவக்கிடங்கில் வைத்து இறந்து போன நபரின் பிரேதத்தை இறந்து போனவரின் பெற்றோர்கள் அடையாளம் காண்பித்தாக தனியாக அறிக்கை எதுவும் தயாரிக்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் superimposition செய்வதற்கு மண்டை ஓடை மட்டும் தனியாக எடுத்து கொடுத்தவர் யார் என்றால் மருத்துவர் கோகுலபாண்டியசங்கர் என்பவர் எடுத்து கொடுத்தார். நான் சொல்வது போல் சொன்ன முறையில் மண்டை ஓட்டை மட்டும் தனியாக சேகரித்து superimposition பஅனுப்பவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கைப்பற்றியதாக சொல்லப்படும் மண்டை ஓட்டிற்கும் உடலுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித தொடர்பும்இல்லை என்று சொன்னால்சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன தேதியில் சொன்ன முறையில் பிரேத விசாரணை செய்யவில்லை என்று சொன்னால்சரியல்ல.

10) நான் சொன்னது போல் சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்யவில்லை என்றும் அவை தன்னிச்சையாக உருவாக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் காட்ரோட்டில் சேகரித்த CCTV footage க்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. 27.01.2021 அன்று நான் முதல் விசாரணையில் சொன்னது

போல் 1,2 எதிரிகளை கைது செய்யவில்லை என்றும் அவர்கள் TN 57 V 0619 என்ற வாகனத்தில் பயணம் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அவர்கள் இருவரும் எந்த விதமான தன்னிச்சையான ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும் அதன் அடிப்படையில் எந்த ஆவணங்களும் தயாரிக்க படவில்லை என்றும் எந்த சான்று பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தை நான் சம்பவ இடத்தில் வைத்து கணிணி மூலம் தட்டச்சு செய்து அதை ஒரு கடையில் வைத்து printout எடுத்தேன். எந்த கடை என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது. நான் சொல்வது போல் சம்பவ இடத்தில் வைத்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றும் அதனால் தான் கடையை குறிப்பிட்டு சொல்லமுடியவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அந்த கடையில் printout எடுத்து கொடுத்த நபர் சாட்சியாக கையொப்பம் இடவில்லை என்றால் சரிதான். நான் சொன்னது போல் சம்பவ இடத்தில் வைத்து 1வது எதிரியின் வாக்குமூலத்தில் அடிப்படையில் 27.01.2021 ஆம் தேதி இறந்துபோனவரின் பல்சர் பைக்கை சொன்ன இடத்தில் வைத்து கைப்பற்றிதாக சொல்வது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. நான் சொன்ன சான்று பொருட்கள் அனைத்தும் வழக்கிற்காக உண்மைக்கு புறம்பாக தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

11) 3, 4ம் எதிரிகளை நான் சொன்னது போல் கைது செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. அ.சா.11 ரமேஷ் என்பவர் பணியாற்றிய பெட்ரோல் பங்கில் உள்ள CCTV footage வழக்கிற்கு பாதகமாக இருப்பதால் வேண்டுமென்றே மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் முதல் விசாரணையின் போது தாக்கல் செய்யப்பட்டுள்ள மற்றும் அடையாளம் காண்பிக்கப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் சொன்ன முறையில் சொன்ன தேதியில் தயாரிக்கப்படவில்லை என்றும் பின்னர் வழக்கிற்கு ஏற்றவாறு உருவாக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. 1, 2 எதிரிகளின்ஒப்புதல் வாக்குமூலம் 27.01.2021 ஆம் தேதி காலை 6.30 மணிக்கு தயார் செய்யப்பட்டதாக உள்ளது என்று சொன்னால் சரிதான். ஆனால் தட்டச்சு பிழை ஆகும். அது தட்டச்சு பிழை என இன்று தான் விசாரணையின் போது

சொல்கிறேன். புலன் விசாரணை அதிகாரி விசாரித்த போது சொல்லவில்லை. ஒரே நேரத்தில் 2 ஒப்புதல் வாக்குமூலம் தயார் செய்து இருக்க முடியாது என்றும் பொய்யாக உருவாக்கப்பட்ட காரணத்தினால் தான் ஒரே நேரத்தில் 2 ஒப்புதல் வாக்குமூலம் தயார் செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.நான் மேற்கொண்ட புலன் விசாரணை முறையானது அல்ல என்றும் உண்மைக்கு புறம்பாக எதிரிகளை சேர்த்து ஆவணங்களை உருவாக்கியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

**(Sd/– C. Sankar)**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**பெரியகுளம்.**